www.Padasalai.Net www.CBSEtips.in

FTJ

# முதல் பருவ தொகுத்தறித் தேர்வு - 2023

7 - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 2.00 மணி

மதிப்பெண்கள் : 60

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 X 1 = 10

1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் .............. .
   அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்
2. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது .......... .
   அ) பச்சை இலை ஆ) கோலிக் குண்டு
   இ) பச்சைக்காய் ஈ) செங்காய்
3. பாஞ்சாலங்குறிச்சியில் .......... நாயை விரட்டிடும்.
   அ) முயல் ஆ) நரி இ) பரி ஈ) புலி
4. 'தன் + நெஞ்சு' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........... .
   அ) தன்நெஞ்சு ஆ) தன்னெஞ்சு இ) தானெஞ்சு ஈ) தனெஞ்சு
5. 'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ....... .
   அ) இரண்டு + டல்ல ஆ) இரண் + அல்ல
   இ) இரண்டு + இல்ல ஈ) இரண்டு + அல்ல
6. ஒலியின் வரிவடிவம் ............ ஆகும்.
   அ) பேச்சு ஆ) எழுத்து இ) குரல் ஈ) பாட்டு
7. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் .......... .
   அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை
   இ) முண்டந்துறை ஈ) கூந்தன் குளம்
8. முத்துராமலிங்கத் தேவர் நடத்திய இதழின் பெயர்..... .
   அ) இராஜாஜி ஆ) நேதாஜி இ) காந்திஜி ஈ) நேருஜி
9. "வேட்கை" என்னும் சொல்லில் ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு ...........
   அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) இரண்டு
10. 'யாண்டு' என்னும் சொல்லின் பொருள் ............ .
    அ) எனது ஆ) எங்கு இ) எவ்வளவு ஈ) எது

ஆ) எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 6X2=12

11. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.
12. வாழும் நெறி யாது?
13. தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?
14. மொழியின் இரு வடிவங்கள் யாவை?
15. காடு - வரையறுக்க.

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

CS CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in

16. முத்துராமலிங்கத் தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.
17. 'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.
18. தகுதி வழக்கின் வகைகள் யாவை?

**இ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3 X 4 = 12

19. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
20. 'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனற்றை எழுதுக.
21. பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் பற்றி எழுதுக.
22. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?
23. புலிகள் குறித்து நீங்கள் அறிந்துகொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**ஈ) பின்வரும் மனப்பாடப்பகுதிப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

24. அ) 'அருள் நெறி' ............ எனத் தொடங்கும் ........... 'அன்பறமே' வரை 'எங்கள் தமிழ்' பாடலை எழுதுக.

ஆ) 'ஏதிலார்' ...... எனத் தொடங்கும் மனப்பாடக் குறள்.

**உ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 8 X 1= 8

25. தொகைச் சொல்லை விரித்தெழுதுக. இருதிணை.
26. ***பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக.***

மேகங்கள் சூழ்ந்து கொண்டது.

27. ***எதிர்பாலுக்குரிய பெயரை எழுதுக.***

சிறுவன் X .................. ;

28. ***கோடிட்ட இடத்தைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக.***

திருக்குறளில் .............. அதிகாரங்கள் உள்ளன.

29. இடைச்சொல் 'கு' சேர்த்துத் தொடரை எழுதுக.

முல்லை தேர் தந்தான் பாரி.

30. ***இருபொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக.***

நீதிமன்றத்தில் தொடுப்பது ................. .

'நீச்சத் தண்ணி குடி' என்பது பேச்சு .............. .

31. ***பொருந்தாத சொல்லை எடுத்து எழுதுக.*** பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து
32. ***கலைச்சொல் எழுதுக.*** - Jungle.

**ஊ) கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி.** 2 X 6 = 12

33. வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக. *(அல்லது)*

நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

34. ***கட்டுரை வடிவில் விடையளி.***

தாய்மொழிப் பற்று. *(அல்லது)* நான் விரும்பும் தலைவர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner